ஒரே சீராகக் கேட்கும். சபரிமலைப் பாதையின் அழுதா மேட்டுக்குரிய அக்கோஷங்கள் ஆழ்ந்து சிந்திப்போர்க்கு வாழ்க்கையின் வனாந்திரப் பாதைகளில் வரும் 'அழுகை மேடு'களில் ஏற்றிக் கிடத்திவிடுமாறு பிரார்த்திக்கும் பிரார்த்தனைகளாக ஒலிக்கும்.

அழுகை மேடுகளற்ற வாழ்க்கைப் பாதைகள் தாம் இல்லையே! எனவே இவை ஆழ்ந்த பொருள் சுமக்கும் அர்த்த ஆழம் மிக்க கோஷங்கள்!

### அன்னதானம்

''அன்னம் பஹூ குர்விதா'' (அன்னத்தை மிகுதியாக ஆக்குக); ''அன்னம் ந நிந்தயாத்'' (அன்னத்தைக் குறை கூறாதே); அன்னம் ந பரிசக்ஷித'' (அன்னத்தை வீணாக்காதே); ''அராத்யஸ்மா அன்ன மித்யா க்ஷதே'' (அன்னத்தை வழிபாடு செய்யாமல் உண்ணக் கூடாது) என்றெல்லாம் வேதம் ஆணையிடுகிறது. அன்னத்தின் சிறப்புணர்ந்து அன்னத்தையே பிரம்மமாகக் கருதினார் பிருகு முனிவர். பக்தி உலகம் அன்னதானத்தின் சிறப்பினை மிகவும் வலியுறுத்தும். இந்த வேதச் சிந்தனையால் சமூக முக்கியத்துவம் பெறும் ஓர் உயர் மனநிலை உருவாகிறது.

அன்னதானம் ஐயப்ப வழிபாட்டின் அழகிய அம்சங்களில் ஒன்று. அது சபரியாத்திரையின் இன்றியமையாக் கூறாகவே திகழ்கிறது. விரதமிருக்கும் வேளையிலும் அன்னதானம் செய்தல் மிக முக்கியம்; பம்பை நதி தீரத்தில் ''பம்பா சத்யா'' எனும் பெயரிலும் அது முக்கியம். எனவே அன்னதானம் எனும் ஆன்மீகப் பண்பாடு ஐயப்ப வழிபாட்டில் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. ''அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா'' எனும் சரணமுழக்கம் ஐயப்பன்மார் செவிக்கும் சிந்தைக்கும் தேனாக ஒலிக்கும் முழக்கமாகும்.

## ஆ

### ஆபரணமேடை

கரிமலைப் பள்ளத்தாக்கினை அடுத்துத் தென்கிழக்கில் அமைந்த மேடை இது. பந்தள மகாராஜாவின் அரண்மனையிலிருந்து சந்திதானம் நோக்கிச் செல்லும் திருவாபரணப் பெட்டிகளைச் சுமந்து வருவோர் இம்மேடையில் பெட்டிகளை வைத்து ஓய்வெடுப்பது வழக்கம்.

### ஆரியங்காவு

தர்மசாஸ்தா எழுந்தருளிய முக்கிய கோயில்களில் ஒன்று. செங்கோட்டை - திருவனந்தபுரம் சாலையில் உள்ளது. புனலூருக்குக் கிழக்கே சுமார் 30 கி.மீ. தூரம். இடக்கால் மடித்து, வலக்கால் தொங்கவிட்டு யானைமீது எழுந்தருளிய திருக்கோலம். இங்கு ஐயன் பூரணா-புஷ்கலா சமேதராக அருள் பாலிக்கிறார். மண்டல பூஜை விழாவின் போது பெருங் கூட்டம் திரள்கிறது. ஐயப்பனின் கோயிலின் வலப்புறம் சிவன் கோயிலும், இடப்புறம் தேவி கோயிலும் உள்ளன. நாலம்பலத்தின் உள்ளே மலையாள முறையிலான ஆசாரமும், திருவிழா காலத்தில் தமிழ் ஆசாரமும் பேணப்படுகிறது. திருக்கல்யாண உற்சவம் மிகவும் புகழ் பெற்றது. மதுரை சௌராஷ்டிர இனத்தவர் சம்பந்தி உறவினராகக் கொண்டு வரும் சீர்வரிசைச் சடங்கு குறிப்பிடற்குரியது.நடை திறப்பு - காலை 5.00 முதல் 12.00 வரை. மாலை 5.00 முதல் இரவு 8.00 வரை.

### பங்குனி உத்திரம்

பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில், பௌர்ணமி நாளில் பங்குனி உத்திரம் கொண்டாடப்படுகிறது. சந்திரன் உத்திர நட்சத்திரத்தில் இருப்பதால் இந்த விழாவிற்கு இப்பெயர் ஏற்பட்டது. பங்குனி உத்திரம் என்று வழங்கப் படும் இந்நாளில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்படும் சில நிகழ்ச் சிகள் வருமாறு:

- முருகன்-தெய்வயானை திருமணம்
- ஸ்ரீராமர்-சீதை திருமணம்
- சுந்தரேஸ்வரர்-மீனாட்சி திருமணம்
- ஆண்டாள்-ரங்கமன்னார் திருமணம்
- சிவபெருமான் ரதிக்காக மன்மதனை எழுப்பித் தந்த நாள்
- அர்ஜுனன் அவதார நாள்
- சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பிறந்த நாள்

சபரிமலையில் பக்தர்கள் ஐயப்பனுக்கு 'ருத்ராபிஷேகம்' செய்து விசேஷ வழிபாடுகள் செய்கிறார்கள்.

### ஆலயம் அமைந்த விதம்

ஐயப்பன் புலிப்பால் கொணர்ந்த அதிசயத்தில் அரண்மனை புளகாங்கிதம் அடைந்தது; பரவசம் எய்தியது. அகத்தியர் உணர்த்தியதால் பந்தள மன்னன் மணிகண்டனை ஹரிஹர புத்திரனாகக் கண்டார். தன் பணி முடித்தமையால் ஐயப்பன் வளர்ப்புத் தந்தையிடம் பிரிவதற்கு அனுமதி பெற்றான். தன்னுடன் வாழ்ந்த அந்த ஆன்மீக அனுபவம் அனைவருள்ளும் தழைக்கும் பொருட்டு ஐயப்பன் நீலிமலையில் ஆலயம் அமைக்க அருளிச் செய்தான். ஆலயம் கிழக்கு நோக்கி அமையவும், பதினெட்டுப் படிகளுடன் விளங்கவும், அருகில் மாளிகைப்புரம் நிலைக்கவும், ஆண்டுதோறும் விழா நிகழ்த்தவும் அரசனிடம் ஐயன் பணித்தான். மணிகண்டன் எய்த அம்பு வீழ்ந்த இடமே பிரதிஷ்டைக்கு உரிய இடமாயிற்று. பரசுராமரே பிரதிஷ்டையை நிகழ்த்தினார்.

### ஆழிபூஜை

ஐயப்ப வழிபாட்டில் இடம் பெறும் ஒரு சிறப்பு பூஜை. இது யாத்திரை கருதிய ஐயப்பன்மார், இரவில் பெருந்தீ மூட்டி, அதைச் சுற்றிச் சரண கோஷம் எழுப்பிச் செய்யும் உற்சாகம் மிக்க சிறப்பு வழிபாடு. இது வெள்ளக்குடி, படுக்கை எனவும் பெயர் பெறும். இருமுடிக்கட்டுச் சுமந்து சபரி மலை புறப்படும் முன்பு, மண்டலக் காலத்தில் ஒருநாள், பந்தல் அலங்கரித்து, பரிவார தெய்வங்களுடன் ஐயப்பனை எழுந்தருளச் செய்து பூஜை செய்து தீபாராதனை நிகழ்த்துவர். பின்பு அங்கு அமைத்த ஆழியைச் சுற்றி நின்று ஐயப்பன்மார் சரணம் முழக்குவர். மெல்ல மெல்லத் துள்ளிக் குதித்து ஆடிக் கொண்டே ஆவேசம் பெறுவர். இசைக் கருவிகள் முழங்கும். கனலைக் கையால் வாரி இறைத்தும், ஆவேசம் கொண்டும் தம்மை மறந்து இறையுணர்வில் மூழ்குவர்.

### ஆறாட்டு

சபரிமலை விழா ஆறாட்டு எனும் சடங்குடன் நிறைவு பெறுகிறது. பக்தர்கள் மனம் நெகிழ்ந்து எழுப்பும் சரணமந்திரம்